# ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் (பொறுப்பு) நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர்: திருமதி.ச.ராணி.,

ந.க.எண்.51/2024/அ2 நாள்:05.07.2024

பொருள்: மனைப்பிரிவு – சேலம் மாவட்டம் – ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி – சர்வே எண்கள்.203/6C1B, 203/6C1C, 203/6C1D, 203/7இல் 2.1325 ஏக்கரில் (8629.92ச.மீ) பரப்பு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்குதொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டடது –25 குடியிருப்பு மனைகளை அங்கீகரித்து இறுதி ஒப்புதல் வழங்குதல்.

பார்வை:
1. திரு.கே.அமானுல்லா மற்றும் 4 நபர்கள், எண்.2/159, பல்பாக்கி கிராமம், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் என்பவரின் விண்ணப்பம், நாள்.05.02.2024.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் கடித ந.க.எண்.SLM/MAWKGFJ6/15183/2023/2024/TCP, நாள்.05.02.2024.
3. ஓமலூர் சார் பதிவாளர் அவர்களின் தானபத்திர ஆவண எண்.11787/2023, நாள்.11.12.2023.
4. இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.60(11), நாள்.20.06.2024.
5. இவ்வலுவலக செலுத்துசீட்டு எண்.91/2024–25, நாள்.03.07.2024.

-----

**உத்திரவு:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட 12வது வார்டு, நேரு நகர், சர்வே எண்கள்.203/6C1B, 203/6C1C, 203/6C1D, 203/7இல் 2.1325 ஏக்கரில் (8629.92ச.மீ) பரப்பு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்க பார்வை 1இல் காணும் விண்ணப்பித்தில் திரு.கே.அமானுல்லா மற்றும் 4 நபர்கள், எண்.2/159, பல்பாக்கி கிராமம், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் ஆகியோரால் கேட்டு கொண்டதை தொடர்ந்து, பார்வை 2இல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் உத்திரவில் மேற்படி மனைப்பிரிவுக்கு நிபந்தனைகளின் பேரில் Approval No.SWP/DTCP/SALEM/LAYOUT NO:33/2024 (Planning Permission No:11/2024) என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3இல் காணும் சார்பதிவாளர் அலுவலக பத்திர ஆவணங்களின் படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களை இப்பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனை பார்வை 4ல் காணும் இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் மூலம் அங்கீகரிக்கப்பட்டு, இப்பேரூராட்சி மன்றத் தீர்மானத்தில் மேற்படி சர்வே எண்கள்.203/6C1B, 203/6C1C, 203/6C1D, 203/7இல் 2.1325 ஏக்கரில் (8629.92ச.மீ) பரப்பு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுகளில் உள்ள மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்க அங்கீகரித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை 1 முதல் 3 வரையிலான ஆவணங்களின்படியும், பார்வை 4ல் காணும் இப்பேரூராட்சி மன்றத்தீர்மானத்தின்படியும், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட 12வது வார்டு, நேரு நகர், சர்வே எண்கள்.203/6C1B, 203/6C1C, 203/6C1D, 203/7இல் 2.1325 ஏக்கரில் (8629.92ச.மீ) பரப்பு கொண்ட நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள 25 எண்ணிக்கையிலான குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி (திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில்) கூர்ந்தாய்வு கட்டணம் – ரூ.25000/– தல ஆய்வு கட்டணம் ரூ.10000/–, விண்ணப்ப கட்டணம் ரூ.2000/–, காலியிட வரி ரூ.1,50,087/–, நூலக வரி ரூ.15,009, மனைப்பிரிவு மற்றும் தெரு அமைத்தல் அனுமதி கட்டணம் ரூ.17500/–, மனைப்பிரிவு கட்டணம் ரூ.17500/– மற்றும் வளர்ச்சி கட்டணம் ரூ.30000/– ஆகமொத்தம் ரூ.2,67,096/– (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து தொண்ணூற்று ஆறு மட்டும்) பார்வை 5ல் காணும் இவ்வலுவலக செலுத்துசீட்டு எண்.91/2024–25, நாள்.03.07.2024இன்படி பெற்று, குடிநீர் வசதி ஏற்படுத்தி அதற்கான புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றநிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

05/07/2024

செயல் அலுவலர்,
ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

5/7/2024

பெறுதல்:

திரு.கே.அமானுல்லா மற்றும் 4 நபர்கள்,
எண்.2/159, பல்பாக்கி கிராமம்,
ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.

நகல்:

1. சார்பதிவாளர் அலுவலகம், ஓமலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3. சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
4. மனைப்பிரிவு கோப்பிற்கு.